[11th February 1958

SRI M. P. SUBRAMANIAM : சேலம் மாவட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படும் என்பதற்கு ஆதார பூர்வமான நம்பிக்கை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இது பற்றி சில விவரங்கள் கூற விரும்புகிறேன். முதல் முதலாக அமெரிக்கா தேசத்திலிருந்து இரண்டு நிபுணர்கள் வந்தார்கள். அவர்கள் சேர்வராய் பிரதேசத்தில் இருக்கக்கூடிய பாக்சைட்டை பரிசீலனை செய்தார்கள். 1957-ல் அக்டோபரில் ஸாபோ என்ற பிரஞ்சு நிபுணர் ஒருவர் வந்தார். அவர் பார்த்து விட்டு இங்கு 40 அல்லது 50 லட்சம் டன் பாக்சைட் கிடைக்கும் என்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார். ஆனால் அவர் பிரான்ஸ் சென்றவுடன் தன்னுடைய உறுதியான அபிப்பிராயத்தைக் கூறுவதாக சொல்லியிருக்கிறார். இந்த நிலையில் முதலிலே சர்க்கார் "இண்டஸ்டிரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன்" மூலமாக இதை எடுத்து நடத்துவதாக உத்தேசித்து இருந்தார்கள். ஆனால் தனியார் துறையில் பலர் இப்பொழுது வெளி நாடுகளில் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெற்றி அடைந்தால், அவர்கள் மூலமாகவும் இதை நடத்தலாம் என்பதும் யோசனையில் இருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து இதுபற்றி என்ன செய்ய முடியும் என்பது ஆராய்ச்சியில் இருக்கும்பொழுது, திட்டத்தை எடுத்துக்கொள்வது தனியார் துறையிலா, அரசாங்கத் துறையிலா என்று எப்படி நிர்ணயமாயிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையிலே சிலர் வெளி நாட்டில் இருக்கிற மூலதனம் போடக்கூடியவர்களோடும் இயந்திரம் கொடுக்கக்கூடியவர்களுடனும் சேர்ந்து இதை அமைக்கலாமா என்பது பற்றி பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். "நேசர் ஆப் இண்டஸ்ட்ரி" அலுமினியம் உற்பத்தி செய்வதுதான் இது பற்றி எந்த விதமான அபிப்பிராயப் பேதமும் இல்லை. நமக்கு என்ன மூல கனிப் பொருள்கள் இருக்கின்றன, அதை எப்படி நடத்துவது, 10,000 தொழிலாக அமைப்பதா அல்லது 20,000 தொழிலாக அமைப்பதா என்பதுதான் பரிசீலனையிலிருக்கிறது.

Suppression of Immoral Traffic Act

* 44 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons prosecuted under the provision of the Suppression of Immoral Traffic Act in the State during 1956 and 1957;

(*b*) the number of persons arrested in the Madras City during the same period; and

(*c*) how they are rehabilitated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Six hundred and forty-one persons in 1956 and 678 persons in 1957.

(*b*) Two hundred and sixteen in 1956 and 207 in 1957.

(*c*) (i) Restoration to parents or guardians.

(ii) Giving them in marriage to suitable persons. A grant of Rs. 150 is paid to each such inmate as marriage grant.

(iii) Training as midwives, nurses, teachers, Gram Sevikas, etc., and finding employment outside.

(iv) Appointing them as matrons, cooks, etc., in the institutions themselves.

(v) Sending them as domestic servants.

(vi) Sending them to approved Social service institutions.

SRI N. K. PALANISAMI : ஸார், விபரசார விடுதிகள் வைத்து அங்கு வருகிறவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு மூன்று மாத கால ட்ரெயினிங் தான் கொடுக்கப்படுகிறது. அதனால் அந்தக் காலத்திற்குள் அவர்களால் பூராவும் பயிற்சி பெற முடியவில்லை. அதனால் அவர்களுக்கு ஒரு வருஷமாகிலும் பயிற்சி கொடுத்து பூரா தொழிலையும் கற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி கனம் அங்கத்தினர் நினைக்கக்கூடிய தொழில் கற்றுக்கொடுப்பது இல்லை. அங்கு ட்ரெய்னிங்குக்கு வருகிறவர்களுக்கு கைத்தொழில்கள் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தந்த தொழில்களில் அவர்கள் நல்ல பயிற்சி பெற்ற பிறகுதான் அவர்களை வெளியே அனுப்புகிறார்கள். பரிபூர்ணமான தேர்ச்சி அவர்களுக்கு வருகிற வரையில் அவர்களை வெளியே அனுப்புவது இல்லை. வெளியே சென்றால் கைத்தொழிலை நல்ல முறையில் பயிற்சிவிக்கக்கூடிய நிலைமை வந்தால் தான் அவர்களை அனுப்பப்படுகிறது.

SRI A. A. RASHEED : Is it true that under the pretext of enforcement of the Immoral Traffic Act, the hotel-keepers are harassed by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If any one commits the offence of abettment, punishable under this Act, he should suffer even harassment.

Second Pay Commission

* 45 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have represented to the Centre to bring the Madras State Services within the purview of the Second Pay Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. LAZAR : ஏற்கனவே அதிகச் சம்பளம் வாங்கும் மத்திய சர்க்காருடைய ஊழியர்களுக்கு மேலும் அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் மாகாண சர்க்காருடைய சிப்பந்திகளுக்கும் அதிகப்படியான சம்பளம் கொடுக்கவேண்டும் என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார்களா? அதைப்பற்றி கமிஷனிடம் ஏதாகிலும் சொல்லி இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி சம்பளக் கமிஷனிடம் புகார் செய்து பிரயோசனம் இல்லை. ஆனால் இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் நாங்கள் ஒரு யாதாஸ்தை சமர்ப்பித்திருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, even though the non-gazetted officers of our State do not come under the purview of the Second Pay Commission appointed by the Government of India, have the